செய்திப் பணிப்பாளர் /செய்திஆசிரியர் 21.06.2019

# செய்தி வெளியீடு

## தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்(அடிப்படை 2013=100) : மே 2019

### தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

### பொருளாதார மறுசீரமைப்பு மற்றும் பொது வழங்கல் அமைச்சு

தொலைபேசி: 011-2147414 தொலைநகல்: 011-2877945 மின்னஞ்சல் prices@statistics.gov.lk

2019 மே மாதத்திற்கான தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்(தே.நு.வி.சு.) பற்றிய அறிக்கையை வெளியிடுகையில் தொகைமதிப்பு, புள்ளிவிபரப் பணிப்பாளர் நாயகம், தே.நு.வி.சு. அடிப்படையான வருடத்தின் மீது வருட மாற்றத்தினால் அளவிடப்பட்டவாறு முதன்மைப் பணவீக்கமானது 3.5% ஆக கணக்கிடப்பட்டுள்ளது என தெரிவித்தார். 2019 ஏப்றல் மாதம் பொருட்டு பதிவாகிய முதன்மைப் பணவீக்கம் 3.6% ஆக இருந்தது. 2019 மே மாதத்தில் உணவு மற்றும் உணவல்லாப் பிரிவுகளிலிருந்து பணவீக்கத்திற்கான பங்களிப்புகள் முறையே -0.2%, 3.7% ஆக இருந்த அதேவேளை, 2.1% முதன்மைப் பணவீக்கத்தின் பெறுபேறாக 2018 மே மாதத்தில் பணவீக்கத்திற்கான இந்த இரு பிரிவுகளிலினதுமான பங்களிப்புகள் முறையே -0.02%, 2.1% ஆக காணப்பட்டன.

தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்(தே.நு.வி.சு.) மாதம் மீது மாத மாற்றங்களை ஒப்பிடுகையில் 2019 ஏப்றல் மாதத்தில் பதிவாகிய 127.3 இருந்து 2019 மே மாதத்தில் 128.7 ஆக அதிகரித்துள்ளது. இது, 2019 ஏப்றல் மாதத்துடன் ஒப்பிடுகையில் 2019 மே மாதத்தில் 1.4 சுட்டெண் புள்ளிகள் அதாவது 1.1 சதவீத அதிகரிப்பொன்றைக் காட்டுகிறது. இந்த மாதம் மீது மாத மாற்றத்திற்கான காரணம், உணவுப்பொருட்களின் செலவுப் பெறுமதி 0.89% இனாலும் உணவல்லாப்பொருட்களின் செலவுப் பெறுமதி 0.17% இனாலும் அதிகரித்தமையேயாகும்.

உணவுப்பொருட்களின் அதிகரித்த செலவுப் பெறுமதிகள் மரக்கறி, புதிய மீன், எலுமிச்சம்பழம், உருளைக்கிழங்கு, பால் மா, கருவாடு, சின்ன வெங்காயம், பெரிய வெங்காயம், சீனி மற்றும் வெள்ளைப்பூடு என்பன பொருட்டு பதிவாகின. எனினும், உணவுப்பொருட்களின் குறைந்த செலவுப் பெறுமதிகள் தேங்காய், முட்டை, பப்பாசிப்பழம், வாழைப்பழம், மாம்பழம், தேங்காய் எண்ணெய், கோழி இறைச்சி மற்றும் அரிசி என்பன பொருட்டு பதிவாகின.

முந்திய மாதத்துடன் ஒப்பிடுகையில் 2019 மே மாதத்தில் உணவல்லாப்பொருட்களின் செலவுப் பெறுமதியின் அதிகரிப்புக்கு காரணம், ‘போக்குவரத்து’ (வாகனக் கொள்வனவு மற்றும் எரிபொருள் விலைகள்), ‘சுகாதாரம்’(மருத்துவ/மருந்தக பொருட்கள் கொள்வனவு), ‘பொழுதுபோக்கும் கலாசாரமும்’, ‘தளபாடம், குடித்தன உபகரணம் மற்றும் வழமையான குடித்தன பராமரிப்பு’, ‘நானாவிதப் பொருட்களும் சேவைகளும்’, ‘ஆடையும் காலணியும்’, ‘உணவகமும் ஹோட்டல்களும்’ அத்துடன் ‘அற்ககோல் பானங்கள், புகையிலை & தியக்கமருந்துகள்’(வெற்றிலை) ஆகிய பிரிவுகளில் ஏற்பட்ட செலவுப் பெறுமதிகளின் அதிகரிப்பேயாகும். மேலும், ‘வீடமைப்பு,நீர்,மின்வலு,எரிவாயு,ஏனைய எரிபொருள்கள்’ ஆகிய பிரிவு பொருட்டு செலவுப் பெறுமதியில் ஓரளவு சற்று அதிகரிப்பு பதிவாகியது. அதேநேரம், ‘தொடர்பாடல்’ மற்றும் ‘கல்வி’ போன்ற பிரிவுகளின் செலவுப் பெறுமதிகள் இம்மாதத்தில் மாற்றமின்றி காணப்பட்டன.

2019 மே மாதத்திற்கான தே.நு.வி.சு. அடிப்படையான வருடத்தின் மீது வருட மாற்றத்தினால் அளவிடப்பட்டவாறு பொருளாதாரத்தில் தளம்பலுறும் உணவு, வலு மற்றும் போக்குவரத்து போன்றன தவிர்ந்த மூலாதார பணவீக்கத்தை பிரதிபலிக்கும் மையப் பணவீக்கமானது, 2019 ஏப்றல் மாதத்தில் பதியப்பட்டவாறு 6.3% இல் அவ்வாறே இருந்தது.




**தே.நு.வி.சு. இன் அசைவுகள் (அடிப்படை : 2013 = 100)**

| வருடம் | மாதம் | சுட்டெண் | | சுட்டெண்ணிற்கான மாதத்திற்கு மாதம் % மாற்றம் | | வருடத்தின் மீது வருட பணவீக்க% | |
|---|---|---|---|---|---|---|---|
| | | தே.நு.வி.சு | தே.நு.வி.சு (மூலாதாரம்) | தே.நு.வி.சு | தே.நு.வி.சு (மூலாதாரம்) | தே.நு.வி.சு | தே.நு.வி.சு (மூலாதாரம்) |
| **2018** | மே | 124.3 | 125.1 | 1.1 | 0.2 | 2.1 | 1.7 |
| | யூன் | 126.5 | 125.3 | 1.8 | 0.2 | 2.5 | 1.8 |
| | யூலை | 126.6 | 125.7 | 0.1 | 0.3 | 3.4 | 2.3 |
| | ஓகஸ்ட் | 125.4 | 126.3 | -0.9 | 0.5 | 2.5 | 2.7 |
| | செப்ரெம்பர் | 124.4 | 126.9 | -0.8 | 0.5 | 0.9 | 3.1 |
| | ஒக்ரோபர் | 124.9 | 127.3 | 0.4 | 0.3 | 0.1 | 3.4 |
| | நவம்பர் | 127.7 | 127.6 | 2.2 | 0.2 | 1.0 | 3.1 |
| | திசெம்பர் | 127.1 | 127.6 | -0.5 | 0.0 | 0.4 | 3.1 |
| **2019** | ஜனவரி | 127.3 | 130.2 | 0.2 | 2.0 | 1.2 | 5.1 |
| | பெப்ரவரி | 126.7 | 131.3 | -0.5 | 0.8 | 2.4 | 5.5 |
| | மார்ச் | 126.4 | 131.8 | -0.2 | 0.4 | 2.9 | 5.8 |
| | ஏப்ரல் | 127.3 | 132.6 | 0.7 | 0.6 | 3.6 | 6.3 |
| | மே | 128.7 | 133.0 | 1.1 | 0.3 | 3.5 | 6.3 |

தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களம்